## தினத்தந்தி (29.12.2024)

### பணிபுரிவதற்கான மேன்மையான நிறுவனம் என

# புகழூர் காகித ஆலைக்கு சிறப்பு சான்றிதழ்

நொய்யல், டிச.29-

"கிரேட் பிளேஸ் டு ஓர்க்" என்ற உலகளாவிய ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆண்டு தோறும் பல்வேறு நிறுவனங்களின் பணியிட கலாசாரம், பணியாளர்களின் கருத்து மற்றும் நிறுவன நடைமுறைகள் போன்ற அளவுகோல்களை ஆராய்ந்து "பணிபுரிவதற்கான மேன்மையான நிறுவனம் என்ற சான்றிதழை வழங்கி வருகிறது. அதன்படி புகழூரில் இயங்கி வரும் காகித ஆலைக்கு பணிபுரிவதற்கான மேன்மையான நிறுவனம் 2024-2025 என்ற சான்றிதழை வழங்கி உள்ளது. இந்த காகித ஆலையின் தலைவர் மற்றும் மேலாண்மைஇயக்குனராகசந்தீப் சக்சேனா உள்ளார்.



கிரேட் பிளேஸ் டு ஓர்க் டிரஸ்ட் இன்டெக்ஸ் பணியாளர் கருத்துக்கணிப்பில் இந்திய அளவில் சான்றிதழ் பெற்ற முதல் 100 நிறுவனங்களின் குறியீட்டு மதிப்பெண் 91 சதவீதம் மட்டுமே. ஆனால் காகித ஆலைக்கு 96 சதவீதம் குறியீட்டு மதிப்பெண் கிடைத்துள்ளது. நிர்வாகத்தின் நம்பகத்தன்மை 92 சதவீதம். பணியாளர்களுக்கான மரியாதை 92 சதவீதம். பணியிடத்தில் நேர்மை 90சதவீதம். பெருமை95 சதவீதம். பணியாளர்களிடையே நட்புறவு 91 சதவீதம். மேற்கண்ட குறியீட்டு மதிப்பெண்கள். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்மீது பணியாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. மரியாதை மற்றும் பெருமை ஆகியவற்றைக் காட்டுகிறது. உயர்வான நிறுவன கலாசாரம் மற்றும் பணியாளர்களின் திருப்தியான பணிச் சூழல் என்ற காகித ஆலையின் முன்னோக்கிய பயணத்தில் இந்த சான்றிதழ் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

**தினகரன் (30.12.2024)**

# தமிழ்நாடு காகித ஆலை இந்திய அளவில் சாதனை

வேலாயுதம்பாளையம், டிச. 30: தமிழ்நாடு காகித ஆலையானது. மேலாண்மை இயக்குநர் ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்தீப் சக்சேனாசீரிய தலைமையில் இயங்கிவருகிறது . இந்நிறுவனம் தனது சாதனைகளில் ஒரு அங்கமாக "பணிபுரிவதற்கான ஒன்றாக. மேன்மையான நிறுவனம் 2024-2025* என்ற பெருமை மிகு சான்றிதழைப் பெற்றுள்ளது.



கிரேட் பிளேஸ் டு ஒர்க்" என்ற உலகளாவிய ஆலோசனை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பணியிட கலாச்சாரம். பணியாளர்களின் கருத்து மற்றும் நிறுவன நடைமுறைகள் போன்ற அளவுகோல்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில் இந்த சான்றிதழை வழங்குகிறது.

கிரேட் பிளேஸ் டு ஒர்க் டிரஸ்ட் இன்டெக்ஸ்' பணியாளர் கருத்துக்கணிப்பில் டி என் பி எல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கைக் குறியீட்டு மதிப்பெண் 96% ஆகும். இந்திய அளவில் சான்றிதழ் பெற்ற முதல் 100 நிறுவனங்களின் குறியீட்டு மதிப்பெண் 91% மட்டுமே. ஆனால் டி என் பி எல் நிறுவனத்திற்கு கிடைத்துள்ள இந்த 96% குறியீட்டு மதிப்பெண் பெரிய சாதனையாகும்.

இந்த நிறுவனத்தின் நேர்மறையான ஒற்றுமை உணர்வுடன் கூடிய மரியாதை மற்றும் பெருமைக்குரிய பணிச்சூழலை பிரதிபலிக்கிறது. இந்த சாதனை கீழ்க்கண்ட முக்கிய தலைப்புகளில் டி என் பி எல் வலுவான நிறுவன கலாச்சாரத்தை பறைசாற்றுகிறது. நிர்வாகத்தின் நம்பகத்தன்மை, பணியாளர்களுக்கான மரியாதை 90%, பணியிடத்தில் நேர்மை 95%,, பணியாளருக்கு பெருமை 91% பணியாளர்களிடையே நட்புறவு 92% மொத்தமாக இந்திய அளவில் 92% சதவீதம் பெற்று இந்த சாதனை படைத்துள்ளது.

மேற்கண்ட குறியீட்டு மதிப்பெண்கள். பணியாளர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை. மரியாதை மற்றும் பெருமை ஆகியவற்றைக் காட்டுகிறது. மேலும், 95% பணியாளர்கள் இந்த கணக்கெடுப்பில் கலந்து கொண்டது. நிறுவனத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள தீவிரமான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புக்கு சான்றாகும். உயர்வான நிறுவன கலாச்சாரம் மற்றும் பணியாளர்களின் திருப்தியான பணிச்சூழல் என்ற TNPL-ன் முன்னோக்கிய பயணத்தில் இந்த சான்றிதழ் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

**தினமலர் (30.12.2024)**

# டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு 'மேன்மை' நிறுவன சான்றிதழ்

**வேலாயுதம்பாளையம், டிச. 30–**

*பணிபுரிவதற்கான மேன்மையான நிறுவனம் என்ற சான்றிதழை டிஎன்பிஎல் நிறுவனம் பெற்றுள்ளது.*

இதுகுறித்து டிஎன்பிஎல் மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பணியிட கலாச்சாரம், பணியாளர்களின் கருத்து மற்றும் நிறுவன நடைமுறைகள் போன்ற அளவுகோல்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில், டிஎன்பிஎல் நிறுவனத்திற்கு பணிபுரிவதற்கான மேன்மையான நிறுவனம் 202425 என்ற சான்றிதழை 'கிரேட் பிளேஸ் டு ஒர்க்' என்ற உலகளாவிய ஆலோசனை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கி உள்ளது.



சான்றிதழுடன் டிஎன்பிஎல் மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா.

இதில் கிரேட் பிளேஸ் டு ஒர்க் டிரஸ்ட் இன்டெக்ஸ் பணியாளர் கருத்துக்கணிப்பில், டிஎன்பிஎல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கை குறியீட்டு மதிப்பெண் 96 சதவீதம் ஆகும். இந்திய அளவில் சான்றிதழ் பெற்ற முதல் 100 நிறுவனங்களின் குறியீட்டு மதிப்பெண் 91 சதவீதம் மட்டுமே.

டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு கிடைத்துள்ள இந்த குறியீட்டு மதிப்பெண் அதன் நேர்மறையான ஒற்றுமை உணர்வுடன் கூடிய மரியாதை மற்றும் பெருமைக்குரிய பணிச்சூழலை பிரதிபலிக்கிறது.

மேலும் 95 சதவீத பணியாளர்கள் இந்த கணக்கெடுப்பில் கலந்து கொண்டது நிறுவனம் மீது அவர்கள் கொண்டுள்ள தீவிரமான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.

உயர்வான நிறுவன கலாச்சாரம் மற்றும் பணியாளர்களின் திருப்தியான பணிச்சூழல் என்ற டிஎன்பிஎல் நிறுவனத்தின் முன்னோக்கிய பயணத்தில் இந்த சான்றிதழ் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது.

**இந்து தமிழ் திசை (27.12.2024)**

# டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு 'பணிபுரிய சிறந்த இடம்' சான்றிதழ்



■ சென்னை

கிரேட் பிளேஸ் டு வொர்க் என்பது உலகளாவிய ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் ஊழியர்களின் கருத்து மற்றும் நிறுவன நடைமுறைகளின் அடிப்படையில் தீவிரமாக ஆராய்ந்து நிறுவனங்களை மதிப்பீடு செய்கிறது.

அதன்படி, டிஎன்பிஎல் எனப்படும் தமிழ்நாடு நியூஸ் பிரின்ட் அண்ட் பேப்பர்ஸ் நிறுவனத்துக்கு 2024-25-ம் ஆண்டுக்கான 'பணிபுரிய சிறந்த இடம்' (Great Place to Work Certification) என்ற சான்றிதழை வழங்கியுள்ளது. டிஎன்பிஎல் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சந்தீப் சக்சேனாவின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் இந்த பெருமை கிடைத்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

டிஎன்பிஎல் நிறுவனத்தின் மீது அதன் ஊழியர்களின் நம்பிக்கை குறியீடு 96 சதவீதமாக உள்ளது. இந்தியாவில் உள்ள சிறந்த 100 நிறுவனங்களில் இது சராசரியாக 91 சதவீதமாக உள்ள நிலையில், இந்நிறுவனத்துக்கு இந்த அளவு உயர் மதிப்பெண் கிடைத்திருப்பது நிறுவனத்துக்குள் வளர்க்கப்படும் நேர்மறை, கூட்டு மற்றும் மரியாதையான பணிச்சூழலை பிரதிபலிக்கிறது. நிர்வாகத்தின் நம்பகத்தன்மையில் 92 சதவீதம், மக்களுக்கான மரியாதையில் 92 சதவீதம், பணியிட நேர்மையில் 90 சதவீதம், பெருமையில் 95 சதவீதம், மக்களிடையே நட்புறவில் 91 சதவீதம் மதிப்பெண்களை டிஎன்பிஎல் பெற்றுள்ளது.

இவ்வாறு டிஎன்பிஎல் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் 29/12/2024

# புகழூர் டி.என்.பி.எல்., ஆலைக்கு ‘மேன்மையான நிறுவனம்’ சான்று

**கரூர், டிச. 29–**

உலகளாவிய ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய மேன்மையான நிறுவனம் என்ற சான்றிதழை, புகழூர் டி.என்.பி.எல்., நிறுவனம் பெற்றுள்ளது.

கிரேட் பிளேஸ் டு ஒர்க் என்ற உலகளாவிய ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பணியிட கலாச்சாரம், பணியாளர்களின் கருத்து மற்றும் நிறுவன நடைமுறைகள் போன்ற அளவுகோல்களை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் மேன்மையான நிறுவனம் என்ற சான்றிதழை வழங்கி வருகிறது. இதன்படி, கரூர் மாவட்டம் புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம், ஒட்டு மொத்தமாக, 96 சதவீதம் மதிப்பெண்களை பெற்று மேன்மையான நிறுவனம் என்ற சான்றிதழை பெற்றுள்ளது. இதில், நிர்வாகத்தின் நம்பகத்தன்மை, 92 சதவீதம், பணியாளர்களுக்கான மரியாதை, 92 சதவீதம், பணியிடத்தில் நேர்மை, 90 சதவீதம், பணியாளர்களிடையே நட்புறவு, 91 சதவீதம் பெற்றுள்ளது. இந்த சான்றிதழ் பெற்றதை தொடர்ந்து மேலாண்மை இயக்குனர் சந்தீப் சக்சேனா, ஆலை பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தார். மேலும், இந்திய அளவில் சான்றிதழ் பெற்ற முதல், 100 நிறுவனங்களின் குறியீட்டு மதிப்பெண், 91 சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடதக்கது.